செய்தால், அது பொதுமக்களுக்குக் குறிப்பாக, கிராமங்களிலே இருப்பவர்களுக்கு பயன்படும். அத்தகைய நடவடிக்கைகளை அரசு பின்பற்றுமா? யோகாசனத்தைப் பற்றி நல்ல ஆய்வு நடத்துவதற்கு அரசாங்கத்தின் சார்பில் யோகாசன ரிசர்ச் இன்ஸ் டிடியூட் நிறுவ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கூறிய இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்துதான். மேலும் சித்த மருத்துவத்தைப் பற்றி அவர் நன்கு விவரம் தெரிந் திருக்கக் கூடிய காரணத்தினால் அவருடைய உதவியோடு, இந்த நல்ல கருத்தை முறைப்படுத்தக் கூடிய திட்டத்தை நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் பெயரால் புதிய போக்கு வரத்துக் கழகம் துவக்கும் திட்டம்.

*வினா எண் 220— திரு ஆர். சுந்தரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

தமிழகத்தில் இனி புதியதாக துவங்க இருக்கும் ஏதாவது ஒரு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு பெருந்தலைவர் காம ராஜரின் பெயர் வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தேவையேற்படும் பொழுது இக்கருத்தை அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும்.

திரு செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து சோழன் போக்கு வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருச்சி, தஞ்சைக்கு தனியாக அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே, திருச்சி மாவட்டத்தில் துவங்கவிருக்கும் போக்குவரத்துக் கழகத் திற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயர் வைக் கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதம் துவங்குகின்றது என்ற எண்ணம் இன்னும் ஏற்படவில்லை. துரிதமாகத் துவங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துக்கொண்டிருக்கிறோமே தவிர, தேதிகள் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனிப் போக்குவரத்துக் கழகமாக அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்ட நேரத்திலேயே நான் இப்படி பெருந்தலைவர் காமராஜர் பெயர் வைக்க வேண்டும் என்று கோரி, ஒரு கோரிக்கையை அனுப்பி இருந்தேன். அதையே வினாவாகக் கூட கொடுத்திருந்தேன். அது குறித்து எந்தவிதமான தகவலும் இல்லை. இப்போது அமைச்சர் அவர்கள் வாய்ப்பு ஏற்படுகிறபோது வைக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். எனவே சோழன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்படுகின்றபோது, திருச்சியிலுள்ள பேருந்துக் கழகத்திற்கு அந்தப் பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். தேதி இன்னும் முடிவாகவில்லை. எனவே இந்த நேரத்திலே பெயரைச் சொல்வது நல்லதாக இருக்காது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் பல இடங்களிலே அவர் பெயரை வைத்திருக்கிறோம் என்பதை நீங்கள் உணருகிறபோது, இந்த அரசாங்கம் அவர் பெயரை ஒதுக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இல்லை. தேவையானபோது முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி ; தலைவர் அவர்களே, ஒரு போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்பட்டு, இன்னொரு போக்குவரத்துக் கழகமாக உருவாகின்றபோது, அதிலே பணிபுரிபவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த சில சலுகைகள் பின்னால் கொடுக்கப்படாமல் இருக்கின்றது என்ற புகார் இருக்கிறது. அது உண்மையா ? தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகம் பிரிக்கப்பட்டு, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று ஆரம்பிக்கப்பட்ட போது இத்தகையகுறைகள் இருக்கின்றன எனவே மாநிலம் முழுவதும் உள்ள போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒரே மாதிரியான விதி முறைகளை வகுத்து, இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு இல்லாமல் செய்ய அமைச்சர் என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி பெயர் வைப்பது சம்பந்தப்பட்ட கேள்வி. பிரிப்பதைப்பற்றிய கேள்வி அல்ல. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட காரணத்தினால் சொல்கிறேன். தொழிலாளர்கள் எந்த வகையிலேயும் பாதிக்கப்படுவதற்கு அல்லது பாதிக்கின்ற அளவுக்கு இந்த அரசு தயாராக இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1983 பிப்ரவரி 10]

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, திருச்சி என்று சொல்லுகிறபோதே நம்முடைய நினைவுக்கு வருவது கரிகால சோழன் பெயர்தான். திருச்சியிலே நிறுவ இருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தமிழ் மன்னன், கரிகால் சோழனுடைய பெயர் வைக்கப்படுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்கும் நான் அதே பதிலை திருப்பிச் சொல்லவேண்டியவ னாக இருக்கிறேன். தக்க நேரத்தில் தகுந்தபடி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேசமணி போக்குவரத்துக் கழகம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் அவர்களுடைய பெயரைப் பற்றித்தான் பேசிக்கொண்டு இருக்கிறோம். எனவே, அந்தத் தேதியைப்பற்றி இப்போது சொல்ல முடியாது.

திரு எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல் சோழன் போக்கு வரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோது, ராஜராஜ சோழன் போக்குவரத்துக் கழகம் என்று பெயர் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, 234 சட்டமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொரு பெயரை ஞாபகப் படுத்தலாம். அவற்றையெல்லாம் நீங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அவைகளில் எதை வைப்பது என்று அரசாங்கம் தகுந்த நேரத்தில் முடிவு எடுக்கும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம்-தர்மபுரி மாவட்டத்திலே இயங்கக்கூடிய அண்ணா போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து, தர்மபுரி மாவட்டத்திற்கு தனியாக ஒரு கழகம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது உத்தேசம் இல்லை. பின்பு யோசிப்போம்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே புதிதாக அமைக்கப்பட்டுள்ள போக்கு வரத்துக் கழகத்திற்கு ஜீவா போக்குவரத்துக்கழகம் என்று பெயர் வைக்கப்பட்டு உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

[1982 பிப்ரவரி 10

திருச்சியிலே புதிதாக போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். திருச்சியிலே ஆரம்பிக்கப் பட இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவா போக்கு வரத்துக் கழகம் என்று பெயர் இட்டுவிட்டு, பெரியார் மாவட் டத்திலே இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு கொங்குநாட்டு போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. **முத்துசாமி** : தலைவர் அவர்களே, இலை போட்ட பின்னால்தான் என்ன என்ன வந்தது, எது எது வரவில்லை என்று நாம் பார்க்க முடியும். எனவே, திருச்சி பிரிக்கப்பட்ட பின்புதான் அதைப்பற்றியெல்லாம் கேள்வி எழும். எனவேஇப்போது வைத்த பெயரை மாற்றுவது என்பது பற்றி எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கல்லணையை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 221— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியில் உள்ள கல்லணையை சோழன் போக்குவரத்துக் கழகம் சார்பில் அழகு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி

(அ) ஆம்.

(ஆ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

அழகிரி போக்குவரத்துக் கழத்திற்கான அலுவலகம் மற்றும் பணிமனை

*வினா எண். 222—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு **தனியாக** அலுவலகம், பணிமனை திறக்கப்பட்டதா ?